# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 204/2018**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | **அய்யண்ணன்** | மதம் | .. | **இந்து** |
| தந்தை / கணவர் பெயர் | .. | **சித்தையன்** | தொழில் | .. | **கூலி வேலை** |
| வயது | .. | 58 | ஜாதி | .. | |
| கிராமம் | .. | **அ.புதூர்** | நாள் | .. | 21.09.2023 |
| வட்டம் | .. | **சங்ககிரி** | | | |

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21-ஆம் நாள் வியாழக்கிழமை திரு. அய்யண்ணன் த/பெ. சித்தையன் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1969-ஆம் ஆண்டின் 44-வது ஏற்பாட்டின்படி திரு.இரா.ராதாகிருஷ்ணன், பி.எ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்ககிரி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

<u>வாதி தரப்பு 1 ஆம் சாட்சியின் முதல் விசாரணை</u>

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 1 ஆம் சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். அந்த விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவைதான். எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

1) 08.06.2001 தேதியிட்ட 15ம் பிரதிவாதியின் பெயரிலான கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 23.02.2005 தேதியிட்ட 16ம் பிரதிவாதியின் பெயரிலான கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், புதூர் கிராம பட்டா எண் 1306 க்கான இணைய வழி நகல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், புதூர் கிராம பட்டா எண் 250 க்கான இணைய வழி நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், புதூர் கிராம பட்டா எண் 1817 க்கான இணைய வழி நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 ன் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம் /அய்யண்ணன்

ஒப்பம்/திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.